



# காந்தீயம்

ഗാന്ധിയം

Gandheeyam

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் இரு திங்கள் வெளியீடு

Publication of All Ceylon Gandhi Seva Sangam

மலர் - 30 | இதழ் 04 | ஒக்ரோபர் - நவம்பர் 2014 | விலை ரூபா 10/-


# பனை அபிவிருத்திக்குப் பாடுபட்ட பெரியார் மில்க்வைற் அதிபர் கனகராசா

## -16 ஆவது நினைவு நாளில் அண்ணா எஸ்.பி.நடராசா புகழாரம்-



அகில இலங்கை காந்திசேவா சங்கம் கைதடியிலுள்ள பனை ஆராய்ச்சி நிலையத்தில் 22/7/2014 இல் நடாத்திய மில்க்வைற் கனகராசா அவர்களின் 16 ஆவது நினைவு தின நிகழ்வில் முதன்மைவிருந்தினர் தொழிலதிபர் எஸ்.பி.நடராசா ஆற்றிய உரை

1950 களிலிருந்து யாழ்ப்பாணத்தில் இயங்கிய கலாநிதி க.கனகராசா அவர்களின் மில்க்வைற் நிறுவனம் பனம் பொருள் அபிவிருத்தி உட்பட மரம் நடுகை இயக்கத்தில் அதிக பங்களிப்புச் செய்து வந்தது.

நான் 1957இல் மில்க்வைற்றில் இணைந் தேன். முதலில் ஊழியனாயும் பின் நீண்ட கால தொண்டனாயும் அவர்களுடன் இணைந்து செயற்படும் வாய்ப்புக் கிடைத்தது. மில்க்வைற் கனகராசா அவர்கள் பொதுவில் நிழல்தருமரங்களையும் சிறப்பாகப் பயன் தரு மரங்களையும் உற்பத்தி செய்து இலவசமாக விநியோகித்து மரநடுகையை ஊக்குவித்துவந்தார்.

அவர் நடத்திய மில்க்வைற் பத்திரிகையின் மூலமும், சிறுசிறு துண்டுப்பிரசுரங்கள் மூலமும் மரநடுகையின் இன்றிமையாமையை விளம்பரம் செய்து வந்தார். குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள் மூலமும் மற்றும் நிறுவனங்கள் மூலமும் பனம் விதைகளைச் சேகரிக்கச் செய்து அவற்றின் தொகைக் கேற்பப் பாடசாலைகளுக்கு நீர் இறைக்கும் மோட்டர் வழங்குதல், மாணவர்களுக்குக் கொப்பி,பேனா முதலிய கல்வி உபகரணங்கள் வழங்குதல் மூலம் ஊக்குவித்தார். பனம் விதைகளைப் பொருத்தமான இடங்களில் நடுகை செய்யவும் ஊக்குவித்தார்.

பனை நடுகைமட்டுமன்றிப் பனம் பொருட்களை உற்பத்தி செய்தல் அவற்றைக் கொள்வனவு செய்து பல இடங்களுக்கும் சந்தைப்படுத்தும் வசதிகளைச் செய்து கொடுத்தல் மூலம் கிராமப்புற மக்கள் வாழவும் வருமானம் பெறவும் வழிகாட்டப்பட்டது.

உதாரணமாகத் திரு.இராசநாயகம் அவர்கள் நெடுந்தீவில் உதவி அரசாங்க அதிபராயிருந்த போது அவரின் அனுசரணையுடன் பனம் பொருள் உற்பத்திக்கு அதிக ஊக்கம் அளிக்கப்பட்டது. பனம் கற்கண்டு செய்ய நேர்முகமாக பயிற்சி அளிக்கப்பட்டது. அங்கு உற்பத்தி செய்யப்பட்ட பனம் கற்கண்டு, பாய்,பெட்டி,கடகம் முதலான பனம் பொருட்களைக் கொள்வனவு செய்து ஏனைய நகரப்பகுதிகளுக்கு சந்தைப்படுத்தப்பட்டது.ஏராளமான பனம் விதைகளைச் சேகரித்து வன்னிப் பெரு நிலப்பரப்பில் அவை நடுகை செய்யப்பட்டன.

மண்டைதீவில் உற்பத்தியாகும் பனம் பொருட்களை திருவாளர் பாலசிங்கம் என்பவர் மூலம் ஊக்குவித்துக் கொள்வனவு செய்து விற்கப்பட்டது.

புங்குடுதீவு சர்வோதயம் திருநாவுக்கரசு மூலமாகத் தீவுப் பகுதியில் பிரசாரம் செய்தல், பனம் பொருள் உற்பத்திக்குப் பயிற்சி அளித்தல், சந்தைப்படுத்தல் ஊக்குவிக்கப்பட்டது. இதன்மூலம் அண்ணா கோப்பிக் கடைகளில் பனம் பொருட்கள் விற்பனையாக்கப்பட்டன.இன்றும் இப்பணி தொடர்கிறது.

பனம் விதைகளைக் கூடுதலாகத் தந்தவர் Dr. தர்மலிங்கம் அவர்கள். இவர் தனது இயக்கச்சியிலுள்ள ஐம்பது ஏக்கர் பனைவளவில் சேரும் பனை விதைகளையெல்லாம் வருடம்தோறும் சேகரித்துத்தருவார்.அந்தக்காலத்தில் வன்னிப் பெரு நிலப்பரப்பில் பெரும் பகுதியில் பனைகள் இருக்கவில்லை. கிளிநொச்சி, முரசுமோட்டை, இராமநாதபுரம், மாங்குளம், மல்லாவி, வவுனிக் குளம், துணுக்காய், உயிலங்குளம் பகுதிகளில் விநியோகம் செய்தோம். இது ஒரு பெரு விழாவாகவே ஆண்டு தோறும் நடைபெறும்.

முன்னால் ஒரு வாகனம் ஒலிபெருக்கி மூலம் பனையின் பயன்களை விளம்பரம் செய்து கொண்டு போகும். பின்னால் லொறியில் பனம்விதை போகும். மக்கள் வந்து கூடும் சந்திகள், சந்தைகள், பாடசாலைகளில் வைத்து பனம் விதைகள் வழங்கப்படும், பதிவுகளும் மேற்கொள்ளப்படும்.

அடுத்த வருடமும் அங்கு சென்று நடப்பட்ட பனம் விதைகள் முளைத் திருப்பதை பார்த்து அதிகம் நட்டவர்களுக்கு கதர் ஆடை போர்த்திக் கௌரவித்தல், பாடசாலைகளில் ஊக்கத்துடன் செயற்பட்ட மாணவர்களுக்குக் கல்வி உபகரணங்கள் வழங்கல் நடைபெறும். பனம் பொருட்களின் பயன்பாடுகளில் வன்னியில் வயல்களை அழிக்கும் யானை, எருமைமுதலிய பெரிய விலங்குகள் வயலில் இறங்காதபடி எல்லைகளில் நடப்பட்ட பனைகள் எல்லைக்காவலாக நிற்பதை இன்றும் காணலாம்.

பனம்கட்டி, பனம்கற்காரம், பனஞ்சீனி மற்றும் பெட்டி,கடகம் முதலான வீட்டுப் பாவனைப் பொருட்களை அறிமுகப்படுத்தலும் நாளடைவில் அவற்றை உற்பத்தி செய்வதற்குப் பயிற்சி அளித்தலும் நடைபெற்றது.பனம்பொருள் அபிவிருத்தி பற்றி மேலும் அறிந்து கொள்வதற்குத் தென்னிந்திய காந்தியவாதி திரு.சம்பந்தனை அணுகினோம். அவரும் உவந்து ஏற்று வேண்டிய ஆலோச னைகளையும், செயல்முறைகளையும் எங்கள் தொழிலாளர்களுக்குச் சொல்லித் தந்து உதவினர். அதனை நாம் இங்கும் செய்ய முடிந்தது.

யாழ்ப்பாணத்தில் பனை அபிவிருத்திச்சபை ஒன்று நிறுவ வேண்டும் எனும் கருத்தை முதன் முதலில் கூறியவர் கலாநிதி மில்க்வைற் க.கனகராசா அவர்களே.கொல்வின் ஆர்.டி.சில்வா அமைச்சராக இருந்தகாலத்தில் யாழ்ப் பாணக் கச்சேரியில் நடந்த கூட்டத்தில் இந்த விடயம் முன்வைக்கப்பட்டது.

இன்று பனம் பொருள் அபிவிருத்திச் சபை நாடளாவிய மட்டத்தில் செய்யும் பணிகளைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.மில்க்வைற்றுடன் இணைந்து அண்ணா நிறுவனமும் இப்பணியில் ஈடுபட்டதையெண்ணிப் பெருமைப்படுகின்றேன். இப்பணி தொடரவேண்டும். பூலோக கற்பகதரு எனப் போற்றப்படும் பனையின் மூலம் நமது மக்கள் பயன்பெற்று வாழும் நிலை உருவாக வேண்டும். அதற்கேற்ற மன எழுச்சியையும், மறுமலர்ச்சியையும் ஏற்படுத்த வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

# 145 ஆவது காந்தி ஜெயந்தி தினம்

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் நடாத்தும் 145 ஆவது காந்தி ஜெயந்தியும் சர்வதேச அஹிம்சை தினமும் 02.10.2014 வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மகாத்மா காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மலர் மலை அணிவிக்கும் நிகழ்வைத் தொடர்ந்து, இல. 774, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சங்கத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நடைபெற வுள்ளது.

சங்கத்தின் தலைவர், தி.இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையை 'காந்தீயம்' ஆசிரியர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி நிகழ்த்துவார். பிரதம விருந்தினராக சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக இந்தியன் வங்கி சிரேஷ்ட முகாமையாளர் இரா.கண்ணன் மற்றும் மூத்த காந்தியத் தொண்டர் சரஸ்வதி தம்பிப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்வர்.

'காந்தீயம்' பத்திரிகை வெளியீடும் இடம்பெறும். வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக மெய்யியல்துறை விரிவுரையாளர் ந.சிவகரன் நிகழ்த்த விமர்சன உரையை சங்கத்தின் யாழ் மாவட்டக்கிளைத் தலைவர் கா. கார்த்திகேசு ஆற்றுவார். பாடசாலை மாணவர் மட்டத்தில் நடத்தப்பட்ட காந்தி ஜெயந்தி கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் இடம்பெறும். நன்றியுரையை செல்வி க. பிரமதீஸ்வரி வழங்குவார்.

**கடமையைச் சரிவரச் செய்யுங்கள்**

# 145 ஆவது காந்தி ஜெயந்தி தின கட்டுரைப்போட்டி - 2014 முடிவுகள்

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மகாத்மா காந்தியடிகளின் 145 ஆவது ஜெயந்தி தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் நாடளாவிய ரீதியில் நடத்திய கட்டுரைப் போட்டி முடிவுகள் வருமாறு. இம் மாணவர்களுக்கான பரிசளிப்பு 02.10.2014 வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு இல. 774. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சங்கத்தின் யாழ். மாவட்டப் பணிமனையில் நடைபெறவிருக்கும் காந்தி ஜெயந்தி மற்றும் சர்வதேச அஹிம்சை தின விழாவில் இடம்பெறும்.

**ஆரம்பப் பிரிவு**

1. முதலாம் இடம்: செல்வி அம்பிகை சண்முகலிங்கன்
   தரம் 5, யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.
2. இரண்டாம் இடம்: செல்வன் ஓம்ஷியாம் சங்கர் ஜீவானந்தம்
   தரம் 4, சென்.ஜோண்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.
3. மூன்றாம் இடம்: செல்வன் சுரேந்திரன் ஹரிபிரசாத்
   தரம் 5, யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

**கனிஷ்ட பிரிவு**

1. முதலாம் இடம்: செல்வி அஷாரிஹா அசோகன்
   தரம் 8,யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
2. இரண்டாம் இடம்: செல்வன் இரவிச்சந்திரன் மிதுசன்
   தரம் 8, கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம்
3. மூன்றாம் இடம்: செல்வன் அ.ஒனிசன் அன்ரனி
   தரம் 8, யா/ கென்றியரசர் கல்லூரி,இளவாலை.

**சிரேஷ்ட பிரிவு**

1. முதலாம் இடம்: செல்வன் கனகராசா கனிஸ்ரன்
   தரம் 11, கிளி/ இந்துக் கல்லூரி,கிளிநொச்சி
2. இரண்டாம் இடம்: செல்வன் பிரபாகரன் பகிரதன்
   தரம் 11, கிளி / இந்துக்கல்லூரி,கிளிநொச்சி
3. மூன்றாம் இடம்: செல்வன் மொடன் பிரான்சிஸ் கனிஸ்ரன் கிறிஸ்ரி
   தரம் 11, கிளி/ இந்துக் கல்லூரி, கிளிநொச்சி

**அதிசிரேஷ்ட பிரிவு**

1. முதலாம் இடம்: செல்வி காயத்திரி தேவசுதன்
   தரம் 13, யா/ விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்
2. இரண்டாம் இடம்: செல்வி கிரிசாந்தி செல்வநாயகம்
   தரம் 13, கிளி/ இந்துக்கல்லூரி , கிளிநொச்சி
3. மூன்றாம் இடம்: செல்வி நிவேதா சிவதேவா
   தரம் 13, கிளி/இந்துக்கல்லூரி, கிளிநொச்சி

## காந்திஜீ

இறைவன் எழுதிய
கவிதை
காந்தி

மனிதம் வாசித்த
வரிகள்
காந்தி

புனிதம் போதித்த
மொழிகள்
காந்தி

சுயநலம் இல்லாத
சுதந்திரம்
காந்தி

பொதுநலம் நிறைந்த
சூக்குமம்
காந்தி

மதிநலம் மிகுந்த
மகுடம்
காந்தி

-பூவேந்தன்-
நல்லூர்.

# மக்கள்நேயன் டாக்டர் நாராயணசாமி



காந்தி சேவா சங்கத்திற்கு 'சர்வோதயம் மலர்கிறது' என்ற சஞ்சிகை வந்தபோது நான் ஆவலுடன் பிரித்தேன். அதன் முகப்புப் படமாக டாக்டர் நாராயணசாமி அவர்களின் நிழல் ஓவியமும் மறைந்தார் என்ற செய்தியையும் கண்ணுற்ற போது அதிர்ச்சியடைந்தேன். கண்களிலிருந்து நீர் ஆறாகப் பெருகியது.

டாக்டர் நாராயண சாமி அவர்களுக்கு இறக்கும்போது வயது அறுபது. அதை நம்பமுடியாத இளமைத் தோற்றமும் என்றும் மாறாத புன்னகையுடன் காணும் கம்பீரமும், அறிவொளி வீசும் தீட்சண்ணியமான கருணைக் கண்களுக்கும் சொந்தமானவர் அவர். ஒருமுறை அவரைக் கண்டவர் அவரை என்றுமே மறக்க மாட்டார்கள்.

டாக்டர் நாராயண சாமி அவர்கள் வெள்ளைக் கதராடை அணிந்து டாக்டர் என்ற சிந்தனை இல்லாது மிகமிக எளிமையாக எவருடனும் வேறு பாடின்றி புன்னகையுடன் சாந்தமாக உரையாடுவார். அன்னார் 2009 இல் டாக்டர் A.T ஆரியரத்தினா அவர்களின் அழைப்பில் வழக்கறிஞர் மு.மாரியப்பன், க.மு. நடராஜன் ஆகியோருடன் வருடாந்த மகாநாட்டுக்கு இலங்கைக்கு வந்திருந்தார். அப்போது அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தினரைச் சந்திக்க விரும்பி எமதில்லம் வந்திருந்தார்கள்.

அக் குழுவினருக்கு கொழும்பில் வெள்ளவத்தை சண்முகாஸ் விடுதியில் இராப் போசனவிருந்து அளிக்கப்பட்டது. கையில் தினப்பதிவேட்டுடன் காணப்பட்ட நாராயணசாமி அவர்கள் எமக்கருகில் அமர்ந்து அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் பற்றியும் அதன் தலைவராகவிருந்த திரு.சோ.க.தம்பிப்பிள்ளை அவர்களைப் பற்றியும் ஆவலுடன் விசாரித்தார். இலங்கையில் நடைபெற்ற காந்தியத் தொண்டுகள் பற்றியும், கிளிநொச்சி உருத்திரபுரம் மாணவர் இல்லம் பற்றியும் விரிவாக எடுத்தியம்பினோம். அவர் இந்தியா திரும்பியதும் அம்மாத "சர்வோதயம் மலர்கிறது" என்ற சஞ்சிகையில் அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் பற்றி விபரமாக வெளியிட்டார்.

மறுமுறையும் இலங்கை வந்தபோது வழக்கறிஞர் மு.மாரியப்பனுடன் நால்வர் எமதில்லம் வந்து காந்தி சேவா அங்கத்தவர் பன்னிரண்டு பேருடன் காந்தியக் கொள்கைகளை மக்களிடையே பரப்புரை செய்வது பற்றிக் கலந்துரையாடினர். 2011 ஆண்டு மதுரையில் நிகழவிருக்கும் அகில இந்திய சர்வோதய சம்மேளன மகா நாட்டிற்கு அனைவரையும் வரும்படி அழைப்பிதழ் தந்தனர்.

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தவர்களும் மட்டக்களப்பு காந்திசேவா சங்கத்தினரும் 3 நாட்கள் நடந்த மகா நாட்டில் கலந்து கொண்டோம்.வழக்கறிஞர் மு.மாரியப்பன் அவர்கள் சிறப்பாக மகாநாட்டை நடத்தி முடித்தார். அம் மகா நாட்டில் டாக்டர் நாராயணசாமி ஆற்றிய உரை கருத்தாளமிக்கதாக இருந்தது.

மகாநாடு முடிய டாக்டர் நாராயணசாமி அவர்கள் திண்டுக் கல்லில் அமைந்துள்ள காந்திக் கிராம பல்கலைக் கழகத்திற்கு வருகை தரும்படி இலங்கைக் குழுவை அழைத்தார். எல்லோரும் அங்கிருந்த விடுதியில் தங்கி பல்கலைக்கழக வளாகமும் சுதேச மருந்து, சவர்க்காரம்,கதர் உற்பத்தி செய்யும் இடங்களையும் சுற்றிப் பார்க்க ஏற்பாடு செய்தார் எமது குழுவினர் மன நிறைவுடன் இலங்கை திரும்ப எம்மிருவரையும் தமதில்லத்தில் தங்கவைத்து ஏனைய நல்வாழ்வளிக்கும் இடங்களையும் சுற்றிக் காட்டினார். பல்கலைக் கழக மாணவருக்கு சொற்பொழிவாற்ற தம்பிப்பிள்ளை அவர்களை ஒழுங்கு செய்தார்.

டாக்டர் நாராயணசாமி அவர்கள் காந்திக் கிராம பல்கலைக் கழகத்தில் காந்திய சிந்தனைத்துறைத் தலைவராக இறுதிவரை பணியாற்றினார். அத்துடன் காந்திக் கிராம பல்கலைக் கழகம், காந்திக் கிராம அறக்கட்டளை, ஊழியரகம் ஆகிய மூன்று நிறுவனங்களுக்கிடையே இணைப்பாளராக சிறப்பாகவும் மனப்பூர்வமாகவும் தொண்டாற்றினார். மகளிர் அமைப்புகளுக்கு மிகுந்த அக்கறையுடன் வேண்டிய ஆலோசனைகளையும் வழங்கினார்.

நாம் திண்டுக் கல்லிலிருந்து புறப்படுமுன் ஸ்ரீரங்கம் கோயிலைத் தரிசிக்க விரும்புவதாகக் கூறினோம். உடனே டாக்டர் நாராணயசாமி அவர்கள் தமது நண்பர் திருச்சி தேசியக் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் திரு.நா.பாஸ்கரனோடு தொடர்பு கொண்டு சகல ஏற்பாடுகளையும் செய்தார்.நாம் திருச்சியை அடைந்ததும் நாம் தங்கியிருந்த விடுதியில் டாக்டர் நா.பாஸ்கரன் வந்து எம்மைச் சந்தித்து தமது காரில் ஸ்ரீரங்கம் கோயிலுக்கு அழைத்துச் செல்லும்போது முதலில் ஜீயர் சுவாமியைத் தரிசித்தபின்னரே கோயிலுக்குப் போக விரும்புவதாகத் திரு. தம்பிப்பிள்ளை அவர்கள் கூறினார். உடனே ஜீயரிடம் முதலில் அழைத்துச் சென்றார்.ஜீயர் சுவாமிகளை வணங்கி சில பாசுரங்களைப் பக்தி பரவசத்துடன் பாடினர். ஜீயர் சுவாமிகள் மனம் மகிழ்ந்து அரிசி தூவி நூறாண்டு வாழ்கவென வாழ்த்தினார். பின்னர் டாக்டர் நாராயண சாமியினதும் நா.பாஸ்கரனின் நண்பனுமான திரு.ஸ்ரீநிவாசன் அவர்கள் எம்மை நேரே ஸ்ரீரங்கப் பெருமானிடம் அழைத்துச் சென்று வணங்க உதவினார்.வரிசையில் காத்திராது அண்மையில் சென்று பக்தி பரவசத்தோடு வணங்கும் பெரும் பாக்கியத்தைப் பெற உதவிய பேராசிரியர் மூவரையும் மனதார வாழ்த்தி நன்றியைத் தெரிவித்து இலங்கை திரும்பினோம்.

வழக்கறிஞர் மாரியப்பன் அவர்களுடன் பயிற்சியாளரையும் அழைத்துக் கொண்டு கிளிநொச்சி உருத்திரபுரத்திலுள்ள காந்தி நிலைய மாணவர் இல்லத்தையும் காந்திப் பல்கலைக் கழகம் அமைக்கவிருக்கும் அக்கராயன் காணியையும் பார்வையிடவும் வருவதாகச் சொல்லிச் சென்றார். ஆனால் 25.06.2014 இதயநோயால் திடீரென மறைந்து விட்டார்.

காந்தி நிலையத்தைக் காட்டவும் வளர்ச்சி பற்றிக் கலந்துரையாடவும் வளர்ச்சிக்கு அவரது பங்களிப்பைப் பெறவும் ஆவலுடன் இருந்த நாம் தாங்கொணாத் துயரமும் ஏமாற்றமும் அடைந்தோம். திரு.மாரியப்பன் மறைவினால் மனமுடைந்த நாம் டாக்டர் நாராயணசாமி அவர்களின் மறைவினால் தொடர்துயராயிற்று. அன்னார் மனைவியார் திருமதி மகேஸ்வரியையும் மணி, விஜயராகவனையும் தவிக்க விட்டு மறைந்துவிட்டார். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஈழநாட்டு காந்திய அன்பர்கள் யாவரும் அவரது ஆத்மா சாந்திய அடையப் பிரார்த்திக்கின்றோம்.

டாக்டர் மறைந்தாலும் அவரது காந்தியக் கல்வித்துறையும், பணியும் என்றும் நினைவூட்டிக் கொண்டேயிருக்கும்.

திருமதி. த. சரஸ்வதி
(மூத்த காந்தியத் தொண்டர்)

எனது வாழ்க்கையே எனது செய்தி

# காந்தீயம்

காந்தி ஆண்டு 145, ஒக்ரோபர் - நவம்பர் 2014

## அன்பே அஹிம்சைக்கு ஆதாரம்

இன்று காந்திக்கு வயது 145. அவரின் பிறந்த தினமான அக்டோபர் 2 அவர் கடைப்பிடித்த அஹிம்சையின் பெயரால் சர்வதேச அஹிம்சை தினமாக ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.காந்தி இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக அஹிம்சை வழியில் போராடினார். ஆனால் ஆங்கிலேயரை நேசித்தார். இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக அவர் இடைவிடாது முயன்றார். ஆனால் இரு தரப்பும் வன்முறையில் மோதி இரத்த வெள்ளத்தைப் பெருக்கின. அன்பால், தமது மகத்தான உயிர்த்தியாகத்தால் அவர் அவ்வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். சாதி இந்துக்கள் - தலித் மக்கள் மோதலிலும் தனது நுட்பமான பொறிமுறையைக் கையாண்டு நீதியை நிலைநாட்டியதோடு நட்பையும் ஏற்படுத்தினார்.

மகாத்மா காந்தியடிகள் இடைவிடாது தியாக அன்பால் மானிடத்தை இந்தியாவை ஒன்றுபடுத்த முயன்றார். வெறுப்பை அன்பாக மாற்ற அவர் இடைவிடாது முயன்றார். அன்பே அகிம்சையின் ஆதாரமும் வளர்ச்சியின் சிறந்த வெளிப்பாடும் என்பதைத் தனது செயற்பாடுகள் மூலம் நிரூபித்துக்காட்டினார்.

நாம் அனைவரும் ஒன்று. நாம் அனைவரும் ஒரு குடும்பத்தவர், நாம் அனைவரும் சகோதர, சகோதரியர். எல்லோரிலும் கடவுள் இருக்கிறார் என்ற விழிப்புணர்வு எம்மத்தியில் தோன்ற வேண்டும். இப்படியான சகோதர அன்பின் மூலமே மானிடத்தை இணைக்க முடியும் என்று நம்பியவர் காந்தியடிகள்.

காந்தியடிகள் சிறிய வயதிலேயே தனது தாயால் "தீண்டாதவர்" என ஒதுக்கப்பட்ட துப்புரவுத் தொழிலாளி ஊகாவிலும் கடவுளைக் கண்டார். தன்னைக் 'கறுப்பர்' என ஒதுக்கிக் கொடுமைப்படுத்திய வெள்ளையரையும் நேசித்தார். அவரிடம் வெறுப்புக்கு இடமிருக்கவில்லை. இதனால் எதிரி என்ற சொல் அவரது அகராதியில் இருக்கவில்லை. எம்மிடையே சுதந்திரமும் சமத்துவமும் ஒருங்கு மலர வேண்டியது அவசியமாகும். அன்பு,கருணை, மன்னித்தல், மறுத்தல் ஆகிய பண்புகள் மானிடத்தை ஒன்றுபடுத்தும். உலகை நண்பர், அயலவர், எதிரி எனப்பிரிக்கும் போக்குடன் தேசியம், இனம், சாதி, சமயம், மொழி, வர்க்கம், கொள்கை, கட்சி, பால் எனப் பல வட்டங்கள் இணைக்கப்பட்ட ஆபத்தான நிலை உருவாகின்றது. நமது சமயம், நமது சாதி, நமது நாடு - எதிரி சமயம், எதிரி சாதி, எதிரிநாடு என்ற கருத்துருவாக்கங்கள் வலுப்பெறுகின்றன. இதனால் இறுதியில் மோதலே உருவாகின்றது.

இந்த வேறுபாடுகள் உலகைத்தூண்டாடும் போக்கை மேலும் வலுவடையச் செய்யும். மகாத்மாவின் அன்பை அடிப்படையாகக் கொண்ட அஹிம்சைக் கோட்பாடு மட்டுமே உலகை ஒன்றுபடுத்தும். அது தொடர்பாகச் சிந்திப்பதற்கு இன்றைய தினத்தை ஒதுக்குவோமாக.

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி
ஆசிரியர்.

## வானோங்கு மரங்களை வளர்த்த பெருமான்

கற்பக தருவாகக் காந்திய வாதியாய்
பொற்புடன் விளங்கிய புண்ணியா - நற்றவா
வாழ்வாங்கு நாம் வாழ வானோங்கு மரங்களை
வீழாமல் வளர்த்த பெருமானே.

பெருமானே உயர்திரு கனகராசாவே
பேறுதரு பனை தென்னை வளர்த்தீர் - திருமாலே
பூமிக்கு வந்த அவதார புருஷராய்
சேமிக்கப் பயிர்வள மீந்தாய்

ஈந்தவை யத்தனையும் இன்று பெருதருவாகி
மாந்தருக்குப் பயனளிக்கு தாம் - ஏந்தலாம்
பாரினில் இவர்போல பயனுளயார் செய்தார்
நேரினில் உயிரானார் இன்று

இன்றவர் நினைவு தினம் கொண்டாடுகின்றோம்
ஈன்றவர் ஆசிகளோ எமக்கு - நன்றிவர்
பல்கலைக் கழகமொடு பாடசாலைகளுமே
வெல்ல வைத்தார் பயிர் நன்று

கல்வியில் இவரது வரலாறு வேண்டுமே
காலம் இதைச் செய்யுமா இன்று - நல்ல
இந்த எல்லாச் சங்கமும் ஒருங்கே சேர்ந்து
எம்மண்ணை வாழ வைப்பீரே

எளிமையான சுபாவம் ஏற்றமிகு நற்சிந்தனை
குளிர்மையான குணமோ தங்கம் - இளமையாய்
குரு,சிஷ்ய, பரம்பரைக் கல்வி கற்றதனாலன்றோ
திருவாகிக் குருவானார் எமக்கு

பெருவாரிப் பணமாகக் கொட்டிய போதும்
பேணியே அறமாக்கினார் வென்று - ஒருவாறு
மில்க்வைற் ஸ்தாபனம் மேலோங்க இறைவன்
நல்கவே வரமானார் பிறர்க்கு

சாந்தி நிலவவேண்டும், சகவாசம் பெருகவேண்டும்
ஏந்திய கரமோடு வணங்கினார் - காந்திய
அகிம்சை வாழ்வுதான் அகிலமே ஏற்குமடா
ஆகிட வழிசமைப்போம்

காந்திய பாதையைச் செப்பினிட்டு நமக்கு
கருதரிய பொன்மொழிகளானார் - சாந்தி
சமாதான சகோதர வாழ்வுக்காய் தினமும்
உமைசிவமயமானார் உலகில்.

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்
18.07.2014

*(கைதடியில் நடைபெற்ற மில்க்வைற் கனகராசாவின் 16 ஆவது நினைவு தினத்தில் வாசிக்கப்பட்ட கவிதை)*

## விடுதலைப்பூ

பாரத பூமியின்
விடுதலை
காந்தி

உண்ணா விரதத்தின்
சுதந்திரம்
காந்தி

உரிமை இழந்தவர்களின்
நியாயம்
காந்தி

பிள்ளை மனங்களின்
பிள்ளை
காந்தி

வெள்ளைக் கொக்குகளின்
மல்லிகை
காந்தி

ஐந்து கண்டங்களின்
ஆராதனை
காந்தி

-நல்லை அமிழ்தன் -
நல்லூர்.

# சமகாலக் கல்வியில் காந்தியச் சிந்தனைகள்

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் நடாத்திய காந்தியடிகளின் 66ஆவது சிராத்த தினத்தில் (30.01.2014) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வு நிலைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்கள் ஆற்றிய நினைவுப் பேருரை



**காந்திஜியும் அஹிம்சையும்**

காந்தியின் அஹிம்சை சித்தாந்தத்தின் வெற்றிகளின் அங்கீகாரம் உலகரீதியானது. 2007 ஒக்ரோபர் 2ஆம் திகதியை முதன்முதலாக உலக அஹிம்சை தினமாக ஐக்கியநாடுகள் தாபனம் பிரகடனப்படுத்தியதன் மூலம் வன்முறையற்ற பண்பாடு காந்தியால் உலகுக்கு வழங்கப்பட்ட பெருங்கொடையாகியது.அஹிம்சா மூர்த்தி மகாத்மா காந்தியின் பிறந்ததினமாகிய ஒக்ரோபர் 2 தற்போது வருடாந்தம் உலக அஹிம்சை தினமாக (International Day of Non-violence) கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தியா உலகின் ஞானபூமி என்பதை இராமகிருஸ்ணபரமஹம்சர், விவேகானந்தர், ரவீந்திர நாத்தாகூர், குருநாணக், மகாத்மாகாந்தி போன்றோர் உலகுக்கு வெளிப் படுத்தி, பாரதமாதாவை மேன்மை மிக்கவராக்கியுள்ளனர். உலகின் மனிதகுல மேம்பாட்டுக்குரிய சிந்தனைகளை உத்தமர்களால் மாத்திரமே உருவாக்க முடியும். மக்களுக்காக சிந்தித்தல், மக்களுக்காக உழைத்தல், மக்களுக்காக வாழுதல் என்ற மேன்மைகளுடன் வாழ்ந்த மகான்தான் மகாத்மா காந்தியாவார்.

இந்தியாவில் 110 கோடி மக்களின் அரசியல் உணர்வுகளின் மையசக்தியாக இப்போதும் வாழ்ந்துவரும் மகாத்மா தனது அரசியல் வாழ்வை 1906 செப்டெம்பர் 11ஆம் திகதி தென்னாபிரிக்க நாட்டில் தொடங்கினார். அரசியலும் ஆன்மீகமும் இரண்டறக் கலக்கின்ற "சத்யாக்கிரகம்" அல்லது "உண்மைவிசை" (Truth Force) பயணத்தை தென்னாபிரிக்க மண்ணில்தான் அவர் தொடங்கினார்.

மனிதனின் உலக வரலாறு என்பது முரண்பாடு, யுத்தம், இரத்தக் களரி என்பவற்றினால் தான் எழுதப்பட்டுள்ளது. சிலுவையுத்தம், முப்பதாண்டுப்போர், உலகயுத்தங்கள், "அரபிய வசந்தம்" (Arab Spring) எனப்படும் அண்மைக்காலக் கிளர்ச்சிகள், பயங்கரவாதம் போன்ற அனைத்தும் மனிதர்களுக்கும் மனிதர்களுக்கு மிடையிலான முரண்பாடு களினால் உருவாகி வளர்ந்த வன்முறை வெளிப்பாடுகளாகவுள்ளன.

பண்டைத்தமிழ் இலக்கியங்களின் அடிப்படைக்கருப்பொருள் அகம், புறம் அல்லது காதலும் போரும் என்பதாக அமைந்தது. போருடன்தான் மானுடம் மழந்து கொண்டிருக்கிறது. மகாத்மா காதல், அன்பு, கருணை, மானுட நேயம் என்பதை போராட்ட முறையாகப் பின்பற்றும் புதிய போராட்ட அணுகுமுறையை உலக அரசியலுக்குத்தந்து வெற்றியும் அங்கீகாரமும் பெற்றவர் அதனை உலகின் முதன்மைச் சித்தாந்தங்களில் ஒன்றாக்கியவர்.

உலகின் எல்லாச் சமயங்களும் அஹிம்சை பற்றி உணர்ந்து ள்ளன்போதிக்கின்றன.ஆனால் அந்த எண்ணக்கரு (Concept) வை அரசியல் போராட்ட வடிவமாக மாற்றியமைத்த உலகின் தலை மகனாக மகாத்மா காந்தி விளங்குகின்றார்.

அஹிம்சை ஒரு பலவீனமல்ல அது மிகப்பெரிய மனோபலம். அது ஒரு கோழைத்தனமல்ல அது மிகவும் உறுதியான துணிவு ஆகும். மானிட மென்மையுணர்வு சார்ந்த நடத்தையின் பலமான செயல்முறை யாகவே அஹிம்சை அரசியலில் உணரப்பட்டது. ஆன்மீக உணர்வு, கட்டுப்பாடு, தூய்மை, ஒழுங்கு, பற்றுறுதி, இலட்சிய உறுதி என்பவற்றின் ஒன்றிணைந்த கொள்கையாகவே அஹிம்சையை மகாத்மா காந்தி வெளிப்படுத்தினார்.

இன்று பாரபட்சம், ஒடுக்குதல் என்பவற்றுக்கு எதிராகவும் சனநாயகத்தைக் கட்டியெழுப்பும் மாதிரியிலும் அஹிம்சா இயக்கம் உலகம் முழுதும் மனிதகுலத்தினால் கையாளப்பட்டு வருகிறது. அஹிம்சை என்ற எண்ணத்தைப் புரிந்துகொள்ளுதல், உணர்தல், நம்புதல், நடத்தையில் பின்பற்றுதலென்ற எல்லா நிலைகளிலும் மகாத்மா காந்தி வெளிப்படுத்தினார். அதனை மானிடக் கோட்பாடாக நிலைநிறுத்தினார்.

வறியவர், தீமைக்குட்படுவோர், பெண்கள், குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள், தொழிலாளர் போன்ற பலவகைப்பட்ட சமூகத்தி னருக்கும் எதிராக வன்முறை நிகழ்வதை காந்தியக் கோட்பாடு மறுக்கின்றது.

இயற்கை வளங்களின் மீதுகூட வன்முறை மாதிரியிலான விஞ்ஞான, தொழில்நுட்ப, உற்பத்திச் செயற்பாடுகளை முன்னிலைப் படுத்தும் மனித வாழ்க்கை முறைகள் வளர்ந்துள்ளன. (Sonia Gandhi 2008;07)

இந்த நவீன வன்முறைகளைத் தவிர்த்து எதிர்கால பல தலைமுறை மனிதர்களுக்குரிய பாதுகாப்பையும், சுபீட்சத்தையும் வழங்குவதற்கும் காந்தியின் அஹிம்சை சித்தாந்தம் அடிப்படையாக அமைகின்றது என்பதையும் உணர்ந்து கொள்வது மிகவும் அவசிய மாகிவிட்டது.

இத்தகைய உன்னதமானதும், புனிதம் நிறைந்ததுமான அஹிம்சைக் கோட்பாட்டைக் கோடிக்கணக்கான உலகமக்களுக்காக விட்டுச் சென்ற அஹிம்சா மூர்த்தி மகாத்மா காந்தியின் நினைவாக இப்பேருரை ஆற்றுதற்கு எனக்குக் கிடைத்த இந்த வாய்ப்புக்காக மனம் மகிழ்கின்றேன். அதற்குரிய வாய்ப்பைத் தந்த அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினருக்கு எனது நன்றிகள்.

**சமகாலக்கல்வியில் காந்தியச் சிந்தனைகள்**

பாரதபூமியில் உலகுக்கு வழங்குவதற்கான புதிய சித்தாந் தத்தை உருவாக்கும் பேராற்றலுடன் 1869 ஒக்ரோபர் 02ஆந் திகதி குஜராத்திலுள்ள போர்ப்பந்தர் (Porbandar) என்ற குறுநில ஆட்சி நிலவிய இடத்தில் மோகனதாஸ் கரம்சந்த காந்தி பிறந்தார். அந்த குறுநில ஆட்சியில் மந்திரியாக இருந்த ஒழுக்கம், கடமையுணர்வு, கட்டுப்பாடு நிறைந்த கரம் சந்தகாந்திக்கும், மிகுதியான இறைபக்தி கொண்ட புட்லிபாய்க்கும் இளைய மகனாக மோகனதாஸ் காந்தி பிறந்தார்.

தந்தையின் ஒழுக்கமும் கட்டுப்பாடும் தாயின் தூய இறை பக்தியும் ஒன்றிணைந்த குடும்ப சூழலில் தேசத்துக்கான தந்தையான காந்தி வளர்ந்தார். இந்தக் குடும்ப வாழ்வு தெளிந்த சிந்தனைகளையும் கூர்மையான அறிவையும் விருத்தி செய்தன.

சிறுவயதில் சில பாடங்களைக் கற்க அவர் விரும்பவில்லை. எனினும் நல்ல ஆசிரியர்கள் சிலரின் ஊக்கத்தினால் பின்பு மகிழ்ச்சி யுடன் அவற்றைக் கற்கலானார்.(Jyoti Solapurkar 2008:33) அதன்பின் அதிக ஊக்கத்துடன் தனது பாடங்களைக் கற்கும் சிறந்த மாணவனாக மிளிரத் தொடங்கினார்.

அவரது மாணவப் பருவத்தில் அப்போது பாடசாலைப் பரிசோதக ராகவிருந்த திரு.கைல்ஸ் (Giles) அவரது வகுப்புக்குவந்து சோதித்தபோது ஆசிரியர் ஏமாற்றும்படி பிறரைப் பார்த்துச் சரியாக எழுதும்படி கூறியதை முற்றாக மறுத்ததுடன் ஆசிரியரின் நடத்தைக்காக அன்று முழுதும் கவலையுடன் இருந்தார்.(மேலது)

அவரது வயதிலிருந்த கஸ்தூரிபாய் என்பவரை தனது 14 ஆவது வயதில் திருமணம் செய்தார். 1885 இல் அவரது தந்தையார் இறந்தபோது அவருக்கு 16 வயதாகவே இருந்தது. இங்கிலாந்து சென்று படித்துச் சட்டத்துறை வல்லானாக (Barrister) வந்து தந்தையைப் போல் பெரிய பிரமுகராக வரவேண்டுமென குடும்பத்தில் எல்லோரும் விரும்பிய தால் 1888இல் கப்பலில் இந்தியாவுக்குப் பயணம் செய்தார். கற்கும் காலத்தில் தாய்க்கு வழங்கிய சத்தியத்தின்படி மது அருந்தாமலும், மாமிசம் உண்ணாமலும் படித்து வந்தார். பைபிள், பகவத்கீதை, குர்ஆன் போன்ற எல்லா சமய முதன்மை நூல்களையும் கற்றதால் எல்லாச் சமயங்களும் சமமானவை என்ற தெளிந்த சிந்தனை அவரிடம் உருவானது.

1891இல் பரிஸ்டர் பட்டம்பெற்று இங்கிலாந்திலிருந்து இந்தியா விற்குத் திரும்பினார். கல்வியை நிறைவு செய்து தாயை மகிழ்விக்க வேண்டும் என்று எண்ணித் தாயகம் வந்தபோது தாயார் இருக்கவில்லை. அவர் இறைபதம் அடைந்திருந்தார். (மேலது:35) அவர் பலதடவை முயன்றும் நல்ல வழக்கறிஞராக இந்தியாவில் வளரமுடியவில்லை. தென்னாபிரிக்காவில் அப்துல்லா என்பவரின் வழக்கினைப் பேசுவதற் காக 1893 இல் தென்னாபிரிக்கா சென்றார்.

தென்னாபிரிக்காவின் அரசியல் நிலைமைகள்தான் காந்தி ஜியை புதிய சிந்தனைகளுக்குள் சிக்கவைத்தன. ஆங்கிலேயர் இந்தியர் களை மிகவும் இழிவாக நடத்தினர்.காந்திஜியையும் ஆங்கிலேயர் மரியாதையுடன் நடத்தவில்லை.அவர் ஆங்கிலேயர்களிடம் அடிவாங் கினார் புகையிரதத்திலிருந்து இறங்கிவிடுமாறு கட்டாயப்படுத்தப்பட்டார் (மேலது:37)

இங்குதான் அநீதிக்கு எதிராகப் போராடும் துணிவு மிக்க சிந்தனை அவரை ஆட்கொண்டது. பாரபட்சம் என்ற அரக்கனின் கோரமான முகங்களை நேரில் கண்டு காந்திஜி கோபம் கொண்டார். அவரது சிந்தனைகள் தெளிவுடன் கூர்மை பெற்றன. அநீதிக்கு எதிராகப் போராட வேண்டுமானால் மக்கள் ஒன்றாக இணைய வேண்டும். மக்களை மாபெரும் சக்தியாக ஒன்று திரட்ட வேண்டும். அவ்வாறு செய்யாமல் பாரபட்சம், அநீதி என்பவற்றுக்கெதிராகப் போராட முடியாது

என்று காந்திஜி தீர்மானமாக முடிவெடுத்தார்.

இதற்கான புதிய அணுகுமுறையாக சத்யாக்கிரகம் (Satyagraha) என்ற அஹிம்சைமுறையை வடிவமைத்துக் கொண்டார். இது மானிடநேயம் பற்றிய தெளிந்த சிந்தனையின் மற்றொரு வடிவமாக வெளிப்பட்டது.

மகாத்மாவின் சிந்தனைகளுக்கு ஒழுங்கான வடிவம் கொடுப்பதில் அவரது வழிகாட்டியாகவும், மதியுரையாளராகவும் விளங்கிய கோபால கிருசுஷ்ண கோக்கலே (Gopal Krishna Gokale) அவர்களுக்கு மாபெரும் பங்கிருந்தது.

எளிமையும், உயர்ந்த நோக்கும், துணிகர மனப்பான்மையும் ஒன்று சேர்ந்தபோது மகாத்மாவிடம் தெளிந்த சிந்தனைகள் வளரலாயின. இந்திய சுதந்திர இயக்கத்தின் தலைவராக 1920 இல் காந்தி நியமிக்கப்பட்டதும், உள்ளூர் உற்பத்திகளை நேசிக்கும் சுதேசிய இயக்கம் (Swadeshi Movement) காந்திஜியினால் வலியுறுத்தப் பட்டதும் அவரது சிந்தனைகளில் மறுமலர்ச்சியை வளர்த்தது.

மகாத்மாவின் இளமை, குடும்பம், கல்வி, அனுபவம், எண்ணம், நம்பிக்கை, விழுமியம், உறுதி, நடத்தை போன்ற எல்லாம் ஒன்றிணைந்து கல்வி பற்றிய அவரது எண்ணங்களையும் கல்வி பற்றிய கருத்துக் களையும் உருவாக்கியிருந்தன.

முன்னாள் ஐக்கியநாடுகள் தாபனத்தின் செயலாளர் நாயகமான நியோலின் ஹெய்ஸர் (Noeleen Heyzer) தெரிவித்த பின்வரும் கருத்து முக்கியமானது.

"அவரது (மகாத்மாவின்) அநீதிக்கு எதிரான அஹிம்சை மற்றும் அமைதியான கீழ்ப்படிவின்மை என்ற இரண்டு கோட்பாடுகளும் சர்வதேச கவனத்தை ஈர்த்தன. குடியியல் உரிமை, நீதி, உலகு தழுவிய சுதந்திரம் என்பவற்றுக்கான ஆத்மீக இயக்கம் இந்தியாவுக்கு சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தது. எல்லோரையும் உள்வாங்குகின்றதும் நிலைத் திருக்கத்தக்கதுமான எமது பிரதேச அபிவிருத்தி பொருளாதார, சமூக, பால்நிலை நீதியை அடைதற்கு இன்றும் அவரது கோட்பாடு உதவு கின்றது. மிக மோசமான வன்முறை என்பது வறுமை,பாரபட்சம், மக்களை சமூக ரீதியில் நிராகரித்தல் என்பனவேயாகும்" (Noeleen Heyzer 2008: 119)

**காந்திய கல்விக் கொள்கைகள்**

மகாத்மா காந்தி (1869 - 1948) தமது இளைமைக் கால அனுபவங்கள், அரசியல் உணர்வுகள் என்பவற்றின் அடிப்படையில் மக்களை மேன்மைப்படுத்தும் வழிமுறையில் தனது கல்விக் கொள்கை களை வெளியிட்டிருந்தார்.

அவரது கல்விக் கொள்கையான ஆதாரக் கல்விக் கொள்கையை 1937 இல் வெளியிட்டார். அவரது கல்வி பற்றிய தத்துவங்கள் பின்வருமாறு அமைந்தன.

- குழந்தைகளின் உடல், உள்ளம், ஆன்மா என்பன ஒன்றிணையும் வகையில் சிந்த ஆளுமைப்பண்பு உருவாக்கப்படுதல் வேண்டும்.
- ஏட்டுப்படிப்பு, உடல்உழைப்பு மற்றும் செயற்படுதிறன் என்பவற்றை இசைவான முறையில் ஒருங்கிணைப்பதே உண்மையான கல்வியாகும்.
- உண்மை, அஹிம்சை, சுதந்திரம், அச்சமின்மை, மக்களாட்சியில் நம்பிக்கை, சகிப்புத்தன்மை, சமய சார்பின்மை, சமத்துவம், தற்சார்பு, சுயகட்டுப்பாடு என்பவற்றை மேம்படுத்துவதற்காக கல்வி செயற்படுதல் வேண்டும்.
- எல்லாக் குழந்தைகளுக்கும் ஏழு ஆண்டுகள் இலவசக்கல்வி வழங்கப்படுதல் வேண்டும்.
- கைப்பணி ஒன்றை உற்பத்தி மையதொழில் மாதிரியில் கற்பித்தல் வேண்டும். ஆரம்பக்கல்வியில் இது அடிப்படையாதல் வேண்டும்.
- தாய்மொழியே பயிற்றுமொழியாக இருத்தல் வேண்டும்.
- சுத்தம், சுகாதாரம், குடிமைப்பயிற்சி வேலை, வழிபாடு,விளையாட்டு, பொழுதுபோக்கு போன்ற அனைத்தும் ஒன்றிணைக்கப்படுவது அவசியம்.
- குழந்தையின் முதல்நிலையான தேவையாகிய உணவு, உடை, என்பன நிறைவேற்றப்படுதலும், பின்பு பிள்ளைகளின் உடல், உள வளர்ச்சித் தேவைகள் நிறைவு செய்யப்படுதலும் அதன்பின் கல்வி வழங்கப்படுதலும் அவசியம்.
- கல்வி என்பது செய்வதன் மூலம் கற்பதற்கு வாய்ப்பளித்தல் வேண்டும். பாடநூல்களை வாசிப்பதால் கற்றல் நிகழ்வு முதன்மை பெறுதல் கூடாது.
- மாணவர்களது அன்றாடப் பணிகளை ஆசிரியர்களே நன்கு கவனித்து மதிப்பிடல் வேண்டும்.
- பாடசாலைக் கல்வியும் சமுதாயமும் ஒன்றிணைந்து செயற்படல் வேண்டும்.
- பண்பாட்டினை உணர்கின்ற, நம்புகின்ற. மதிக்கின்ற மாதிரியில் கல்விக்கான கலைத்திட்டம் வடிவமைக்கப்படல் வேண்டும்.

காந்தியின் ஆதாரக்கல்விக் கொள்கையை டாக்டர் ஜாஹீர் ஹ/செயின் தலைமையிலான ஆணைக்குழு ஆராய்ந்து ஏற்றுக் கொண்டது. கல்விநிபுணர் கெயர் (B.G.Kheir) அவர்கள் காந்திய கோட்பாடு பற்றி உயர்வான கருத்துக்களை வெளியிட்டிருந்தார். டாக்டர் கோதாரியின் (1964) கல்விக்குழு காந்தியின் ஆதாரக் கல்வியைத் தனியாக நோக்க வேண்யதில்லை என்றும் எல்லாப் படிநிலைகளிலும் அது இணைந்திருப்ப தாகவும் தெளிவு படுத்தினார்.

இவ்வாறு பல்வேறு காலப்பகுதியிலும் காந்திய கல்விக் கொள்கை இந்தியாவின் கல்வி முன்னேற்றங்களில் அதிக தாக்க விளைவை உருவாக்கி வருகின்றது.

## சமகால கல்வியிலான தாக்கங்கள்

சமகால கல்வி மரபுவழியான "திறமை" பற்றிய எண்ணக் கருவை மாத்திரம் முன்னிலைப்படுத்துவதில்லை. திறமை என்பது மாணவர்கள் வாழ்கின்ற குடும்பசூழல், பெற்றோர் தொழில், வருமானம், கற்கும் வாய்ப்பு, கற்பதற்குக் கிடைக்கும் நேரம் போன்ற பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளது என்பதைச் சமூகவியலாளர் இன்று ஏற்றுக் கொள்கின்றனர்.

கல்வியில் சரிநகர் (Equality) எண்ணக்கரு முதன்மை பெற்றுள்ளது. எல்லாப் பிள்ளைகளதும் சமமாக மரியாதைக்குரியவர்கள் என்பதை இக்கோட்பாடு வலியுறுத்துகின்றது. ஆனால் மகாத்மா காந்தி 1937 இலேயே இதனை வலியுறுத்தியிருந்தார். மாற்றுத்திறனாளிகளை உள் வாங்கும் உள்ளடக்கல் கல்வி (Inclusive Education) பற்றி மேற்கு நாடுகள் இப்போது அதிகம் பேசுகின்றன. சரிநிகர் பற்றிய மகாத்மாவின் சிந்தனை குழந்தைகள், பெண்கள், கிராமிய மக்கள் அனைவரும் கல்வி கற்பதில் சம முக்கியத்துவமுடையவராதல் பற்றி அப்போதே வலியுறுத்தி இருந்தது. 1993 இல் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக் கான நிறுவனம் (OECD) இதே கருத்தை வலியுறுத்தியது. "சரிநிகர், சமத்துவம் என்பன விளைவுகளில் மாத்திரம் உறுதிப்படுத்துவதல்ல. கல்வி ஏற்பாடுகளிலும், வழங்கப்படும் அனுபவங் களின் தராதரங் களிலும் ஒரே நிலையைப்பேணுதலாகும். நல்ல விடயங்களை நியாய மாகப் பகிர்ந்தளிப்பது என்பதுதான்" இது காந்திய சிந்தனையிலும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

1996இல் வெளியிடப்பட்ட டெலோர்ஸ் அறிக்கை இருபத்தியோராம் நூற்றாண்டுக்கான கல்வி தொடர்பான சிபார்சுகளை முன் வைக்கிறது. இது எதிர்காலக்கல்வி தங்கியிருக்கும் நான்கு தூண்களில் "செய்வதற் காக கற்றல்"(Learning to do) என்பதும் முக்கியமானதாக அமை கின்றது. இது மகாத்மாவின் கைப்பணி சார்ந்த கல்விச் சித்தாந்தத்தை உள்வாங்கியுள்ளது. அமெரிக்க கல்வியியலாளரான டூயி (Dewey) அவர்களது "செய்வதன் மூலம் அனுபவங்களைப் பெறுதல்" என்ற சிந்தனையும் உடல் உழைப்பு பற்றிய காந்திய கல்விச் சிந்தனையுடன் ஒன்றிணைகின்றது.

1943இல் இலங்கையில் தேசிய கல்விக் கொள்கைகளில் இலவசக் கல்வியும், தாய்மொழிக் கல்வியும், திறன்சார் கல்வியும் வலியுறுத்தப் பட்டன. இவை காந்திய கல்விக்கொள்கைகளின் மிகையான செல்வாக் குக்கு உட்பட்டிருந்தன.

கிராமங்களில் வாழும் மக்கள், கைத்தொழில் சார்ந்த கல்வி என்ற இலங்கையின் கவனஈர்ப்பு காந்திய சிந்தனைகளினால் பெரிதும் வழிப்படுத்தப்பட்டிருந்தது. சுதந்திர இலங்கைக்கான கல்விக்கொள்கை களில் அக்காலத்தில் காந்திய சித்தாந்தங்கள் அதிக செல்வாக்குச் செலுத்தின.

காந்திய எல்லாக் குழந்தைகளுக்கும் ஏழு ஆண்டு இலவசக் கல்வி வேண்டும் என்றார். இலங்கை இதன்வழியே தானும் சிந்தித்து 5 - 14 வயது வரையான கட்டாய இலவசக் கல்வியை 1940களில் வலியுறுத் தியது. தற்போது அது 16 வயது வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

எல்லாக் குழந்தைகளும் தாய்மொழியில் கல்வி கற்க வேண்டும் என்று காந்தி கூறினார். 1943இல் இலங்கையின் இலவசக் கல்வியின் தந்தை C.W.W. கன்னங்கரா அவர்களும் இதே கருத்தை உள்வாங்கி இதனை இலங்கையில் வலியுறுத்தினார்.இன்றுவரை உயர்கல்விவரை தாய்மொழி மூலம் கல்வி வழங்கப்படும் நாடு என்ற பெருமையுடன் இலங்கை விளங்குகின்றது.

உணவு, உடை என்பன பிள்ளைகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்பது காந்திய சிந்தனையாகும். இலங்கைப் பாடசாலைக் கல்வியில்

(6ஆம் பக்கம் பார்க்க....)

**சமகாலக் கல்வியில்.....**

இலவச மதியஉணவு, பள்ளிச்சீருடை, இலவசப் பாடநூல் என்பன இன்றுவரை வழங்கப்படுகின்றன. இவை காந்திய சிந்தனைகளின் பரவல் நிலைமைகள்தான் என்று குறிப்பிட முடியும். காந்திஜி மூளைக்கான கல்வியுடன் உடல் விருத்தியையும் வலியுறுத்தினார். 2010 இல் வெளியிடப்பட்ட இலங்கையின் எதிர்காலக் கல்வி பற்றிய அரச கொள்கை ஆவணமாகிய "மஹிந்த சிந்தனை" உடல்சார் திறன்கள் பற்றியும் மூளைசார்கல்வி, திறன்சார் கல்வியுடன் இணைதல் பற்றியும் மிகவும் தெளிவாக வலியுறுத்துகின்றது. உற்பத்திகளுடன் கல்வி இணைய வேண்டும் என்ற காந்திய சிந்தனைகளில் வெளிப்பட்ட கருத்தை உள்வாங்கி பல்கலைக்கழகங்களும் கைத்தொழில் உற்பத்தி நிறுவனங் களும் இணைந்து செயலாற்ற வேண்டுமென்றும், இதற்குத் தொழில் நுட்பக் கல்வி துணைசெய்ய வேண்டும் என்றும் மஹிந்த சிந்தனை வலியுறுத்துகின்றது.

இலங்கையில் அறநெறிப் பாடசாலைகள், விழுமியக்கல்வி போன்ற எண்ணக்கருக்கள் கல்வி மற்றும் சமுதாய ரீதியில் முதன்மை பெற்று ள்ளன. எல்லாப் பாடசாலைகளிலும் இந்தியாவில் சமய பாடம் போதிக்கப்படுவதில்லை. ஆனால் இலங்கைப் பாடசாலைகளில் மட்டுமல்ல பல்கலைக் கழகங்களிலும் கூட சமயபாடக் கல்வி முன்னிலை வகிக்கின்றது. இது காந்திய சிந்தனைகள் இந்தியாவை விடவும் இலங்கையின் கல்வியில் மேலாண்மை பெற்று விளங்குவதை தெளிவுபடுத்துகின்றது. இவ்வாறு இன்றுவரை இலங்கையிலும் வேறு பலநாடுகளிலும் சமகாலக் கல்வி நடைமுறைகளில் காந்திய கல்விச் சிந்தனைகள் உணர்வுபூர்வமாகவும் விஞ்ஞானபூர்வமாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

சமூகத்திற்காக உண்மையாக சிந்திப்பவர்களினதும், துன்பப்படு வோரை மேலுயர்த்த வேண்டும் என்ற உயரிய எண்ணங்கள் கொண்டிருப் பவர்களினதும் சித்தாந்தங்கள் எப்போதும் மானிடகுலத்தில் செழுமை மிக்கதாக விளங்கும் என்பதை நாம் உணர்ந்து பெருமை கொள்வோம். காந்திய சிந்தனைகள் இதனாலேயே உலக நவீன கல்வியுடன் ஒன்றிணைந்து வலிமையுடன் வளர்ந்து சென்றுள்ளன. காந்திஜி அவர்களின் தூய்மையான மனிதநேய கல்விச் சிந்தனைகள் சமகாலத் தில் மட்டுமன்றி அடுத்துவரும் பலநூற்றாண்டுகளிலும் ஏதோ ஒரு வடிவில் நிச்சயம் பின்பற்றப்படும் என்பதை நாம் அனைவரும் நிச்சயம் நம்ப வேண்டும். காந்திய சிந்தனை மக்களுடன் ஒன்றிணைந்து ஜீவநதியாக ஓடிக்கொண்டுதானிருக்கும். சமூகத்துடன் அவர் வாழ்ந்து கொண்டு தானிருப்பார். இதுவே மானிட வரலாறாகிவிடும் என்பதை நாம் நம்புவோம். மகிழ்ச்சியடைவோம் அதன் வழி நிமிர்ந்து நிற்போம்.

**உசாத்துணைகள்**

01. **Shastri Bhawan (2008), India Perspectives, New Delhi.**
02. சின்னத்தம்பி.மா. (2014), இலங்கையில் தொழில்நுட்ப மற்றும் தொழில் நுட்பவியல் கல்வி:தேக்கநிலையிலிருந்து பேண்தகு நிலைக்கு நகர்தல், யாழ்ப்பாணம்.
03. சந்தானம்.எஸ். (1987), கல்வியின் தத்துவ சமூக அடிப்படைகள்,சென்னை.
04. **Unesco (2001), Learning to live together; Have we failed, Geneva.**
05. **Department of National planning (2013), The emerging wonder of Asia, Public Investment Strategy 2014 - 2016, Colombo.**

## கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற சிவதர்ம வள்ளல் கற்பகதருகாவலர் கலாநிதி.க.கனகராசா அவர்களின் நினைவு தின நிகழ்வும் "காந்தீயம்" பத்திரிகை அறிமுகமும்

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் கொக்குவில் இந்துக் கல்லூரிச் சமூகத்துடன் இணைந்து நடாத்திய மில்க்வைற் கனகராசா அவர்களின் நினைவு தின நிகழ்வும் "காந்தீயம்" பத்திரிகை அறிமுகமும் 28.07.2014 திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொக் குவில் இந்துக் கல்லூரி சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அண்ணா கோப்பி நிறுவன தொழிலதிபர் பொ.நடராசா கலந்து கொண்டார்.

காந்தி அஞ்சலி, நினைவுச் சுடரேற்றல், மாணவர்கள் சத்தியப் பிரமாணம் எடுக்கும் நிகழ்வைத் தொடர்ந்து வரவேற்புரையை கல்லூரி பிரதி அதிபர் திருமதி சு.திருச்செல்வம் நிகழ்த்தினார். தொடக்க உரையை அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் தலைவர் தி.இராசநாயகம் ஆற்றினார். நினைவுரையை "காந்தீயம்" ஆசிரியர் எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி "சமூகத் தொண்டர் மில்க்வைற் கனகராசா" எனும் தலைப்பில் ஆற்றினார். சிறப்புரையை யாழ்.பல்கலைக் கழக மெய்யியல்துறை விரிவுரையாளர் ந.சிவகரன் "சுற்றுச் சூழல் பாதுகாப்புக் குறித்த காந்தியப் பார்வையும் மில்க்வைற்றின் பணிகளும்" எனும் தலைப்பில் நிகழ்த்தினார்.

கல்லூரி மாணவி செல்வி உ. சாந்திகா "மனித விழுமியங்கள்" எனும் தலைப்பில் பேசினார் "காந்தீயம்" அறிமுகவுரையை கா.கார்த் திகேசு நிகழ்த்த நன்றியுரையை சங்கத்தின் யாழ். மாவட்ட கிளைச் செயலாளர் த.சுகந்தன் நிகழ்த்தினார். மேடை நிகழ்வைத் தொடர்ந்து மில்க்வைற் கனகராசா அவர்கள் நினைவாகப் பாடசாலை வளாகத் தில் மரம் நடுகை செய்யும் வைபவமும் இடம்பெற்றது.



## "மில்க்வைற் கனகராசாவின் வரலாறு தொகுக்கப்பட வேண்டும்" -பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் வேண்டுகோள்-

மில்க்வைற் கனகராசாவின் வரலாறும் அவர் ஆற்றிய பணிகளும் தொகுத்து நூலாக்கப்பட வேண்டும். சமூக அபிவிருத்திக்கும் உள்ளூர் உற்பத்தித் துறையை மேம்படுத்துவதற்கும் அவர் செய்த பங்களிப்புகள் இன்று மறக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு மில்க்வைற் கனகராசாவின் 16 ஆவது நினைவு தின நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் குறிப்பிட்டார்.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு கைதடியிலுள்ள பனை ஆராய்ச்சி நிலையத்தில் 22.07.2014 இல் நடைபெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் இந்நிகழ்வுக்குத் தலைமை ஏற்பதில் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது. எனது இளமைப்பருவத்திலேயே மில்க்வைற் கனகராசா பற்றி அறிந்து கொண்டேன். காந்திய நெறியில் வாழ்ந்த மகான் கனகராசா. பனை வளத்தை அபிவிருத்தி செய்வதற்கு அவர் அயராது உழைத்தார். காந்தியும் பெரியாரும் பனைக்கு முக்கியத்துவம் வழங்கினார்கள். அண்ணா நடராசாவை உள்ளூர் உற்பத்தித் துறையில் ஊக்குவிப்பதற்கு கனகராசாவே உந்து சக்தியாக இருந்தார் என்றார்.

சங்கத்தின் யாழ் மாவட்டக் கிளைத் தலைவர் கா.கார்த்திகேசு 'கற்பகதரு நாயகன் கனகராசா' என்ற தலைப்பில் நினைவுரையாற்றும் போது,

அறம் சார்ந்த சிந்தனைகள் இளவயதிலேயே அவருக்குக் கிடைத்தது. இன்று பாரிய நிறுவனங்கள் செய்ய முடியாததை அவர் தனிமனிதனாக நின்று செய்தார். பனை எமது வாழ்வோடும் வளத்தோடும் பின்னிப்பிணைந்தது. எமது முன்னோர் கள் ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள் என்றால் பனம் பண்டங்களை அவர்கள் உண்டது தான் காரணம். அதை கனகராசா ஊக்குவித்து வந்தார். குடியின் கேடு என்ற புத்தகத்தையும் வெளியிட்டார் என்றார்.

யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தலைவர் மு.ஜெ. சுஜீந்திரன் "காந்தியவாதி கனகராசா" என்ற தலைப்பில் உரையாற்றுகையில்,

பல கௌரவ பட்டங்கள் பெற்ற இலங்கையர் என்றால் அது கனகராசா தான். அரசாங்கம் தேசாபிமானி என்ற பட்டத்தை வழங்கியது. அமெரிக்க தூதரகம் யோகாசனப் பயிற்சிக்கான கலாநிதிப்பட்டம் வழங்கியது. இங்கிருந்து அம்பாந் தோட்டை வரை பனை நாட்டார். முதன் முதலில் பாதுகாப்பு உத்தியோகத் தர்களை நியமித்த ஒரே ஒரு தனியார் நிறுவனம் என்றால் அது மில்க்வைற் தான். "உழைத்து வாழ்பவனே மனிதனாவான்" என்ற காந்தியின் வாசகம் கனகராசா அமரும் கதிரையின் பின்னே சுவரில் எழுதப்பட்டிருக்கும். மேசையில் மஞ்சள் துணியில் பனை மரக்கொடி பறந்தபடி இருக்கும். என்றார்.

பனை தென்னை வள அபிவிருத்திச் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பொது முகாமையாளர் வ.சிவகுமார், மூத்த காந்தியவாதி சோ.க. தம்பிப்பிள்ளை, ஆகியோரும் உரையாற்றினர்.

வரவேற்புரையை "காந்தீயம்" ஆசிரியர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி நிகழ்த்தினார். முதன்மை விருந்தினர் உரையை அண்ணா தொழிலதிபர் பொ.நடராசா ஆற்றினார். நன்றியுரையை சங்கத்தின் பொருளாளர் மா. லீலா விநோதன் ஆற்றினார். காந்தீயம் பத்திரிகையும் வெளியிட்டு வைக்கப்பட்டது. மண்டப நிகழ்வைத் தொடர்ந்து அமரர் கனகராசா நினைவாக பனை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் பனை மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன.

## யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் அவுஸ்ரேலியா கிளையினரின் செயற்கரிய செயல்

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள திருநகர் தெற்கு மாதர் சங்கத் தலைவி திருமதி.செ.சோமசேகரம்பிள்ளையின் திட்ட முன் மொழி வினை ஏற்றுக்கொண்ட யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் அவுஸ்ரேலியா கிளையினர் மூன்று லட்சத்து அறுபத்தாயிரம் ரூபாவினை மாதர் சங்கத்திற்கு அனுப்பி உதவியு ள்ளனர். அந்நிதி பின்வரும் செயற்பாட்டிற்காகப் பயன்படுத் தப்பட்டது.

| | |
|---|---|
| (1) தாய் தந்தையற்ற மாணவர்கட்கு | 25000/= |
| (2) வறுமைக் கோட்டின் கீழ்வாழும் மாணவர்கட்கு | 56000/= |
| (3) பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கட்கு | 65000/= |
| (4) தையற் பயிற்சி வழங்குவதற்கு | 100000/= |
| (5) மாற்று வலுவுள்ள திறனாளிகட்கு | 60000/= |
| (6) உணவுற்பத்திக்கான சுழற்சிமுறைக் கடனுக்கு | 60000/= |

இவ்வுதவியினைப் பயன்கருதாது வழங்கிய யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்திற்கு மாதர் சங்கத்தினர் நன்றியினை நவில்கின்றனர் .

## மனிதன், மனிதனாக வாழ்வதற்கு மனம், சிந்தனை, நடத்தை,உணர்வுகள் தெளிவானதாக அமைய வேண்டும்.

மனம்,சிந்தனை,நடத்தை,உணர்வுகள் ஒரு மனிதனிடம் சரியாக இருப்பின் அன்றாட கடமைகளைச் சரிவரச்செய்து மனிதன் மனிதனாக வாழலாம். உணர்வுகளும், மனஎழுச்சியுமே நன்றாக அமையவும், சுகதேகியாக வாழவும் உதவுகின்றன. துயரும், பிரச்சினையும் கவலையளித்து உடல் , உள வளர்ச்சியைப் பாதித்து ஓர் மனிதனை நோயாளி ஆக்குகின்றன. இவற்றிற்கு உள, உடல் நலன் பேணும் சிகிச்சைகள் ஆரம்பத்திலேயே ஏற்பத்தினால் நலமாக வாழமுடியும்.

உள நலனின் முக்கியத்துவத்தினை தெளிவுபடுத்துவதற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவிபிரதேச செயலர் செல்வி என்.ரஞ்சனா தலைமையில் 7.7.2014 திங்கட்கிழமை காலை நடைபெற்றபோது அங்கு உரை நிகழ்த்திய சமூக சேவைகள் அமைச்சின் யாழ் மாவட்ட உளவளத்துறை இணைப்பாளர் என். உதயகுமார் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உள நலனும் உடல் நலனும் பற்றி விளக்குகையில்,

உடல் உள தொடர்புகள் சரிவர அமையாவிட்டால் அவை ஒன்றையொன்று பாதிப்பன. இவற்றினை பைத்தியம் என்றோ உடல் உள நோய் என்றோ கருதிவிடக்கூடாது.

அவற்றினை இனம் கண்டு உரிய ஆலோசனைகள், பரிகாரங்கள் செய்வதன் மூலம் சுகப்படுத்தி நலமான வாழ்வுக்கு வழி காட்டலாம். புரிந்துணர்வு, ஒற்றுமை, சமாதானம், நல்லுறவு, விட்டுக்கொடுப்பு, உதவிசெய்தல் ஒருவரை ஒருவர் மதித்தல் ஆகிய பண்புகள் மன ஆரோக்கியத்திற்கு வழிவகுப்பன. ஒழுக்கம், கருணை, நன்னடத்தை, ஆன்மீகம் சார் நன்னிலைக்கு உயர்த்தும்.

தற்போது இளம் சமுதாயம் தவறான வழிக்குச் செல்வதைக் காண்கிறோம். தற்போதைய சூழல் அமைப்புக்களே இவற்றிற்கு காரணம். இவற்றைப் போக்க பெற்றோர்களும் சமுதாயச் சூழலும் விழிப்பாக இருந்து நல்வழிகாட்டச் செயற்பட வேண்டும். உளநோய்கள் மனநோய் அல்ல என்பதை எமது மக்கள் உணர்ந்து, உளநலனில் அக்கறையுடன் வாழவேண்டும்.

உளநலன் பற்றிய ஆலோசனைகள் பெற விரும்பும் தனிப்பட்டோரும், பொது அமைப்புக்களும் யாழ் மாவட்டச் செயலகத்திலோ, தமது பிரதேச செயலகங்களிலோ உள்ள சமூக சேவைப் பிரிவில் தொடர்பு கொண்டு சேவையைப் பெறலாம் என்றார்.

தற்போதைய கால கட்டத்தில் எமது பிரதேசத்தில் மதுப் பாவனை அதிகரித்துள்ளதாகவும், இவற்றின் பரந்த விநியோகமும் கட்டுப்பாடற்ற தன்மையுமே இவற்றிற்கு காரணமெனவும், இவற்றின் விநியோகம் விற்பனவுகளைக் கட்டுப்படுத்த அரச அதிகாரிகளும் அரசியல் தலைவர்களும் உதவிசெய்யவேண்டுமெனக்குழுநிலை விவாதத்தில் பங்கு பற்றிய பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலரும் வேண்டுகோள் விடுத்தனர்.

உளவளத்துறையைச் சேர்ந்த எஸ். சதீஸ் காந்தன், சமூக சேவைப் பிரிவைச்சேர்ந்த செல்வி ரீ. பிரியா மற்றும் பொது நிறுவனங்களைச் சேர்ந்த எம்.லீலாவிநோதன், பி.பரமேஸ்வரி, ஐ.சிவதர்சன் ஆகியோரும் கருத்துத் தெரிவித்தனர்.

## 100ஆவது அகவையில் காந்தி பக்தர் வை.க.சிற்றம்பலம்



40க்கும் மேற்பட்ட தமிழிலக்கிய பிரபந்தங்களைத் தந்த புலவர் மணி முதுபெரும்புலவர் வை.க.சிற்றம்பலம் அவர்கள் கடந்த 16.09.2014 இல் தனது 100 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்.

கலாபூஷணம், சமூகமாமணி போன்ற பட்டங்களைப் பெற்ற புலவர் அவர்கள் மகாத்மா காந்தி அடிகள் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். காந்தீயம் பத்திரிகைக்கும் காந்திமகான் தொடர்பான பல ஆக்கங்களை எழுதி வந்துள்ளார். அகில இலங்கை காந்தி சேவா சங்கம் வெளியிட்ட 'சத்திய விஞ்ஞானம்' நூல் அறிமுகம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற போது கலந்து கொண்டு சங்கத்தை வாழ்த்தியவர்.

புலவர் பெருமான் இன்னும் நீண்டகாலம் வாழ்ந்து தமிழுக்கும் காந்தியத்திற்கும் தொண்டாற்றவேண்டும் என்று வாழ்த்தி வணங்குகிறோம்.

(ஆ-ர்)

## கூட்டுறவுத் துறையில் கௌரவம்



92 ஆவது சர்வதேச கூட்டுறவு தின நிகழ்வு 20.09.2014 ஆந்திகதி கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் சபைத்தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது பெரிய மாவடி சாவகச்சேரியைச் சேர்ந்த செல்லத்துரை சுப்பிரமணியம் யாழ். மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் நீண்டகாலம் ஆற்றிய சேவைக்காக கௌரவிக்கப்பட்டார்.

1970 இல் இருந்து இன்றுவரை கூட்டுறவாளராகச் செயற்படும் இவர் ஓய்வுபெற்ற அதிபராவார். கூட்டுறவு உயர் தரப்பயிற்சியும் கூட்டுறவு ஆற்றுப்படுத்தல் பயிற்சியும் பெற்றுள்ள இவர் யாழ் மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க சமாசத்தலை வராகவும் தென்மராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் சங்கத்தானை குமரன் ஐக்கிய சி.க.கூ. சங்கத்தலைவராகவும் கொடிகாமம் ப.நோ.கூ. சங்கம் கிராமிய வங்கி கடன்பகுதி முகாமையாளராகவும், சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கத்தில் நிர்வாக உறுப்பினர், உபதலைவர், தலைவர் ஆகிய பதவிகளையும் வகித்துள்ளார்.

அத்துடன் அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் உறுப்பினராகவும் பணியாற்றி வருகிறார்.

## காந்தியக் கல்வியாளர் நாராயணசாமி மறைந்தார்



டாக்டர் எஸ்.நாராயணசாமி அவர்கள் 25.06.2014 ஆம் தேதி நண்பகல் 1மணிக்கு இதய வலியால் இறைவனடி சேர்ந்தார் என்ற துயரச் செய்தி அவரை அறிந்த அனைவரையும் உலுக்கியது. 60 வயதான பேராசிரியர் நாராயணசாமி அவர்கள் காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகத்தில் காந்திய சிந்தனை துறைத் தலைவராக இருந்தார்.

காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகம், காந்திகிராம அறக்கட்டளை, ஊழியரகம் ஆகிய மூன்று நிறுவனங்களுக்கு மிடையே ஒருங்கிணைப்பாளராக சிறப்பாகவும் உளப்பூர்வமாகவும் பணியாற்றினார். எப்போதும் இனிய முகத்துடனும் புன்சிரிப்புடனும் அனைவரிடமும் நேயத்தோடு பழகி அனைவரின் நட்பையும் சம்பாதித்தார். சர்வோதய இயக்கப் பணியாளர்களிடம் நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்களிட மிருந்து கல்வித் துறைக்கு ஊக்கமும் ஆக்கமும் சேர்த்தார். எண்பதுகளிலேயே யாழ்ப்பாணத்தில் உள்ள புங்குடு தீவுப் பகுதியில் UNDP தொண்டராகப் பணி செய்து ஸ்ரீலங்காவிலுள்ள சர்வோதய அன்பர்களிடம் குறிப்பாக அரியரத்னேயுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். வழக்கறிஞர் மு. மாரியப்பன் அவர்கள் இலங்கை சென்ற பொழுது மூன்று நான்கு முறைகள் அவருடன் பயணித்து அங்கு நடைபெற்று வரும் சர்வோதயப் பணிகளை நேரில் கண்டு உணர்ந்தார். நம் நாட்டிலும் எங்கெல்லாம் சர்வோதய இயக்கம், கூட்டங்கள் நடைபெற்றனவோ அங்கெல்லாம் முடிந்தபோதெல் லாம் சென்று சர்வோதயத் தொண்டர்களிடம் அறிமுகம் செய்து கொண்டார். இயக்கத் தொண்டர்கள் பற்றி நூல் எழுதி வெளியிட்டுள்ளார்.

27.06.2014ஆம் தேதி காந்திகிராமத்தில் கதர் இயக்கப் பிதாமகர் வி.இராமச்சந்திரன் நினைவாக கதர் பற்றிய கருத்தரங்கம் ஒன்று நடத்த ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். 25.06.2014 தேதியே அவர் மண்ணுலகை விட்டுச் சென்று விட்டார். அவருடைய துணைவியார் மகேஸ்வரியும்,மணி,விஜயராகவன் என்ற இரு மகன்களும் மிகுந்த துக்கத்தில் உள்ளார்கள். அவர்களுக்கு நமது அனுதாபம். அன்னாரின் ஆன்மா சாந்திய டைய பிரார்த்திப்போமாக!

நன்றி:- சர்வோதயம் மலர்கிறது ஜூலை 2014

மறைந்த காந்தியக் கல்வியாளர் நாராயணசாமி அவர்களுக்கு அகில இலங்கைகாந்திசேவா சங்கமும் காந்தீயமும் தமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து நிற்கின்றன.

# அன்பர் தபால்

காந்திக் கொள்கையைப் பலர் ஏற்றுக்கொள்கிறார்கள். அவற்றைப் பின்பற்றுவது கஷ்டம் என்று சேரப்பின் நிற்கிறார்கள். நன்கொடைகளையாவது தந்து உதவட்டும்.

காந்திக் கிராமக் காணியில் (270 ஏக்கர்) காந்திய சிந்தனைக் கல்லூரி நிறுவுவது மிக நல்ல முயற்சி. நிறைவேறும். காந்தி நூல்கள் மலிவான விலையில் வருவிக்க முடிந்தால் 5000, 10 000 ரூபாவுக்கு நான் எடுத்து வீட்டில் வைத்து விற்றுப் பரப்புகிறேன். விலைகூடிய புத்தகங்களுக்கு முதல் இடுவதும் வாங்க ஆட்களைச் சேர்ப்பதும் எனது நிலையில் வசதிக் குறைவு. ஒரு வருடம் 8 மாதமாக மெல்ல நடந்து கொண்டு வீட்டிலேயே இருக்கிறேன்.

ஓய்வு நேரங்களில் வருகின்ற அன்பர்களுடன் கலந்துரையாடுவது, புத்தகங்களை வாசித்து முக்கிய விஷயங்களை எழுதுவது என காலம் கழிகிறது. இதுவரை 27 கொப்பிகள் எழுதி முடித்து விட்டேன். எழுதுவது மூன்று விஷயங்கள். 1. பழமொழிகள் 2. அறிவுரைகள் 3. வரலாறுகள் இவற்றுக்கு சாதி, சமய, தேக வித்தியாசங்கள் இல்லை.

காந்தியம் பத்திரிகை குறைந்தது 1000 பிரதிகள் அச்சிடவேண்டும். மாதம் ஒருமுறை வெளியிட முயற்சிக்க வேண்டும். எதற்கும் பொது மக்களின் ஆதரவு வேண்டும்.

13.09.2014

பொ.கந்தையா
(காந்தி ஆசிரியர்)
திருகோணமலை

காந்திக் கல்வியாளர் நாராயணசாமி மறைந்து விட்டார் என்ற செய்தியைப்பார்த்து மிகவும் கதிகலங்கி விட்டேன். மரணத்திற்கு வயதில்லைத்தான். ஆயினும் அந்த மண்ணிலே பலகாலம் வாழ வேண்டிய தேவை உள்ளவர். எத்தனையோ பேருடன் நான் பழகியிருக்கிறேன். அத்தகைய ஓர் உத்தமரை உண்மையாக நான் இது வரை கண்டதில்லை. சொல்லாமற் செய்வார் பெரியர் என்பதற்கு இலக்கணமாக அமைந்தவர் அவர் தான். இன்னும் பலர் இருக்கலாம். ஆனால் நான் அறியவில்லை. அவர் எப்படியோ அவர் மனைவியும் ஒரு பத்தினி உத்தமி, அவரின் இழப்பைத் தாங்கி ஒருநாட்கூட உயிர் வாழ முடியாதவர். ஆனால் எப்படியோ பிள்ளைகளுக்காக உயிர்வாழ வேண்டிய கட்டாயமும் கடமையும் உண்டு. அதுவே அவர் மறைந்த கணவனுக்குச் செய்யும் வழிபாடு தொண்டுமாகும் என்பதே திண்ணமானது.

இல 108, கோயிற்கடவை
துன்னாலை மத்தி,
கரவெட்டி

ஆ.வடிவேலு
ஓய்வு பெற்ற அதிபர்

திரு.சோ.க.தம்பிப்பிள்ளை அவர்களுக்கு,

காந்தீயம் ஜீலை - ஆகஸ்ட் வெளியீடு கிடைத்தது. தாங்கள் செய்துவரும் பணிகள் யாவும் நான் பத்திரிகை வாயிலாக அறிவேன். திருமணத்தம்பதிகளுக்கு தங்கள் ஆசீர்வாதம் செய்த படத்தை காந்தீயத்தில் பார்த்தேன். மகிழ்ந்தேன். பலருக்கு படத்தைக் காட்டினேன். உங்கள் பணிகளுக்கு நான் என்றும் உறுதுணையாக இருப்பேன். தங்களை விரைவில் சந்தித்து மகிழ்வேன் ஐயா.

பண்ணாகம்
சுழிபுரம்

அன்பன்
க.வாமதேவன்



## அகிம்சை என்றால் என்ன? விடை தருகிறார் காந்தியடிகள்

- அகிம்சை என்பது அன்பின் வலிமை. அகிம்சா வாதி. அஞ்சுவது கடவுளுக்கு மட்டுமே. அகிம்சையின் அகராதியில் தோல்விக்கு இடமில்லை. அகிம்சையை மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடைப்பிடிக்க வேண்டும்.
- சத்தியமும் அகிம்சையும் குறிப்பிட்ட ஒருவருக்காகவோ ஒரு கூட்டத்தாருக்காகவோ உண்டானவை அன்று. அங்ஙனமே தன்னடக்கமும் ஒரு சிலருக்காகவன்றி, மனித சமுதாயம் முழுவதற்கும் அவசியமாகும்.
- அகிம்சா யுத்தம் எப்போதும் ஓர் உடன்பாட்டினாலே தான் முடியும். அதனால் எதிரிக்கு அவமான நிலையும் உண்டாகாது.
- அகிம்சை ரேடியம் போன்று நுண்ணிய சூக்குமமாகச் செயற்பட்டுச் சமுதாயம் முழுவதையும் சீர்படுத்துகிறது.
- அகிம்சை மன்னிப்பின் எல்லைக்கோடு. அத்தோடு பணிவின் எல்லைக்கோடுமாம்
- அகிம்சை முறை நம்மீது எதிரிகள் கொண்டுள்ள விரோத மனப்பான்மையைச் சாந்தப்படுத்தும், அன்றிப் பகைமையை வளரவிடாது.

## சஞ்சிகை அறிமுகம்



**சஞ்சிகையின் பெயர் - சர்வோதயம் மலர்கிறது (மாத இதழ்)**

**வெளியீடு - கதர் நண்பர்கள் மன்றம்**

அமரர் மு.மாரியப்பன் அவர்களை நிறுவனராகக் கொண்ட சர்வோதயம் மலர்கிறது மாத இதழுக்கு க.மு.நடராஜன் ஆசிரியராகவும் அ.அண்ணாமலை இணை ஆசிரியராகவும் பணியாற்றி வருகின்றனர்.

காந்தியப் பார்வையில் சமூகம், பொருளாதாரம், அரசியல் என்ற இலக்கோடு இச் சஞ்சிகை மாதம் தோறும் மதுரையில் இருந்து வெளிவருகின்றது. மு.மாரியப்பன் அவர்களே இச்சஞ்சிகைக்கு நிர்வாக ஆசிரியராகச் செயற்பட்டு வந்தார். அவரது மறைவின் பின்னரும் காந்தியத் தொண்டர்களின் அயராத உழைப்பினால் உரிய காலத்தில் இச்சஞ்சிகை வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காந்தியின் திருவுருவப் படத்தைத் தாங்கிய ஆகஸ்ட் 2014 இதழ் பல அரிய கட்டுரைகளைக் கொண்டுள்ளது. டாக்டர் சுசீலா நய்யார். ஐ.மாயாண்டி பாரதி, டாக்டர் மு.ஞானம், ம.நித்தியானந்தம், மா.பாதமுத்து, சாவித்திரி கண்ணன், சு.சிவலிங்கம் முதலிய காந்திய சிந்தனையாளர்கள் புகைப்படங்களைத் தந்துள்ளனர். காந்திய அன்பர்கள் கட்டாயமாக வாசிக்க வேண்டிய சஞ்சிகை இது. (ஷ)

**தொடர்புகளுக்கு:- கதர் நண்பர்கள் மன்றம்**
**காந்தி நினைவு நிதி**
**காந்தி அருங்காட்சியக வளாகம்**
**மதுரை - 625020**

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பணிகளுக்கு நிதி உதவி செய்ய விரும்பும் அன்பர்கள் சங்கத்தின் வங்கிக் கணக்குக்கு அனுப்பி உதவுக.

அகில இலங்கை காந்தி சேவா சங்கம்
சேமிப்புக் கணக்கு இலக்கம் : 1117599
இலங்கை வங்கி
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## வாசகர்களுக்கு!

இவ் இதழின் இலவச பிரதியொன்றைத் தபால் மூலம் பெற விரும்புவோர் ரூபா.10.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரி எழுதப்பட்ட நீண்ட தபாலுறையை ஆசிரியர், "காந்தீயம்" இல. 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியும்.

இப்பத்திரிகை 774. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும் திரு.சோ.க.தம்பிப்பிள்ளை அவர்களால் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக யாழ்ப்பாணம், கே.கே.எஸ் வீதி, இலக்கம் 717இல் அமைந்துள்ள தீபம் பதிப்பகத்தில் 2014 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
ஆசிரியர் : எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி B.F.A,M.A(Gandhian Thought)